# சவால்களை ஒருங்கிணைந்து எதிர்கொள்வோம்

## அமெரிக்காவுக்கு பிரதமர் மோடி வேண்டுகோள்



நியூயார்க் நகரத்துக்கு செவ்வாய்க்கிழமை சென்றடைந்த பிரதமர் நரேந்திர மோடியை உற்சாகத்துடன் வரவேற்ற இந்திய வம்சாவளியினர்.

**புது தில்லி, ஜூன் 20:** அமெரிக்காவுக்கு அரசுமுறைப் பயணமாகப் புறப்பட்டுச் சென்ற பிரதமர் நரேந்திர மோடி, சர்வதேச சவால்களை ஒருங்கிணைந்து எதிர்கொள்ள அந்த நாட்டுக்கு அழைப்பு விடுத்தார்.

ஜூன் 21-ஆம் தேதிமுதல் 23-ஆம் தேதி வரை அமெரிக்காவில் அரசுமுறைப் பயணம் மேற்கொள்ளவுள்ள பிரதமர் மோடி, அந்த நாட்டுக்கு செவ்வாய்க்கிழமை புறப்பட்டுச் சென்றார். அமெரிக்க பயணத்தை முடித்துக் கொண்டு ஜூன் 24, 25 ஆகிய தேதிகளில் எகிப்து நாட்டுக்கு அவர் செல்லவுள்ளார்.

அமெரிக்கா புறப்படுவதற்கு முன் அவர் வெளியிட்ட அறிக்கையில், 'அமெரிக்க அதிபர் ஜோ பைடனும், அவரின் மனைவி ஜில் பைடனும் விடுத்த சிறப்பு அரசுமுறை அழைப்பானது, இருபெரும் ஜனநாயக நாடுகளுக்கு இடையேயான சிறப்புவாய்ந்த நல்லுறவை வெளிக்காட்டுகிறது.

அதிபர் பைடன், மூத்த அதிகாரிகள் உள்ளிட்டோருடன் மேற்கொள்ளவுள்ள பேச்சுவார்த்தை இருதரப்பு நல்லுறவை நிலைப்படுத்துவதற்கு உதவும். மேலும், அந்தப் பேச்சுவார்த்தை, ஜி20, க்வாட், இந்தோ-பசிபிக் பொருளாதார வளர்ச்சி விதிமுறைகள் உள்ளிட்ட பன்னாட்டு கூட்டமைப்புகளில் ஒருங்கிணைந்து செயல்படவும் வழிவகுக்கும்.

நியூயார்க்கில் உள்ள ஐ.நா. தலைமையகத்தில் புதன்கிழமை (ஜூன் 21) நடைபெறவுள்ள சர்வதேச யோகா தின நிகழ்ச்சியில் கலந்து கொள்வதுடன் அமெரிக்க பயணத்தைத் தொடங்கவுள்ளேன். அதில் ஐ.நா. அதிகாரிகள் மட்டுமல்லாமல் சர்வதேச சமூகத்தைச் சேர்ந்த பலரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

அதைத்தொடர்ந்து வாஷிங்டன் டி.சி. நகருக்குச் சென்று அதிபர் பைடன் உள்ளிட்டோரைச் சந்திக்கவுள்ளேன்.

கடைசியாக கடந்த 2021-ஆம் ஆண்டு செப்டம்பரில் அமெரிக்காவுக்குப் பயணம் மேற்கொண்டேன். இடைப்பட்ட காலத்தில் பலமுறை அதிபர் பைடனை சந்திப்பதற்கான சூழல் அமைந்தது.

**பன்முகத்தன்மைவாய்ந்த நல்லுறவு:** இந்தியா-அமெரிக்கா இடையேயான நல்லுறவானது பன்முகத்தன்மை வாய்ந்ததோடு ஆழமானதாகவும் உள்ளது. இந்தப் பயணமானது இருதரப்பு நல்லுறவை மேலும் வலுப்படுத்துவதற்கு வழிவகுக்கும்.

இந்தியாவின் மிகப் பெரும் வர்த்தகக் கூட்டாளியாக அமெரிக்கா திகழ்ந்து வருகிறது. அறிவியல்-தொழில்நுட்பம், கல்வி, சுகாதாரம், பாதுகாப்பு உள்ளிட்ட துறைகளில் இரு நாடுகளுக்கும் இடையே நெருக்கமான ஒத்துழைப்பு காணப்பட்டு வருகிறது.

பாதுகாப்புத் தளவாடங்கள் உற்பத்தி, விண்வெளி, தொலைத்தொடர்பு, செயற்கை நுண்ணறிவு, உயிரி தொழில்நுட்பம் உள்ளிட்ட துறைகளில் இந்தியாவும் அமெரிக்காவும் நெருங்கிச் செயல்பட்டு வருகின்றன. மேலும், இந்தோ-பசிபிக் பிராந்தியம் சுதந்திரமாகவும் வெளிப்படைத்தன்மையுடனும் திகழ்வதை இரு நாடுகளும் ஒருங்கிணைந்து உறுதி செய்து வருகின்றன.

**நல்லுறவுக்கு ஆதரவு:** இந்தியா-அமெரிக்கா இடையேயான வலிமையான நல்லுறவுக்கு அமெரிக்க நாடாளுமன்றம் தொடர்ந்து ஆதரவளித்து வருகிறது. அந்நாட்டு நாடாளுமன்றத் தலைவர்கள் விடுத்த அழைப்பை ஏற்று கூட்டுக் கூட்டத்தில் உரையாற்றவுள்ளேன்.

இரு நாடுகளுக்கும் இடையேயான நல்லுறவை வலுப்படுத்துவதற்கு மக்களுக்கு இடையே நெருங்கிய நட்புறவு நிலவ வேண்டியது அவசியம். அமெரிக்காவில் இந்திய-அமெரிக்க சமூகத்தினரைச் சந்திப்பதை எதிர்நோக்கியுள்ளேன்.

இந்தியாவுக்கான முதலீடுகளை அதிக அளவில் ஈர்க்கும் நோக்கில் சில முன்னணி நிறுவனங்களின் தலைமைச் செயல் அதிகாரிகளைச் சந்தித்துப் பேசவுள்ளேன். அதன் மூலம் சர்வதேச விநியோகச் சங்கிலி வலுப்படும். சர்வதேச சவால்களை ஒருங்கிணைந்து எதிர்கொள்வோம்.

**முதல்முறையாகப் பயணம்:** எகிப்து அதிபர் அப்தல் ஃபட்டா எல்-சிசி விடுத்த அழைப்பை ஏற்று, வாஷிங்டன் டி.சி. நகரில் இருந்து கெய்ரோவுக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளேன். இந்தியாவின் நெருங்கிய நட்பு நாடாகத் திகழ்ந்து வரும் எகிப்துக்கு முதல் முறையாக அரசுப் பயணம் மேற்கொள்வதை ஆவலுடன் எதிர்நோக்கியுள்ளேன்.

நடப்பாண்டு குடியரசு தின விழாவில் அதிபர் எல்-சிசி சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார். எகிப்து பயணமானது இரு நாடுகளுக்கும் இடையே வளர்ந்து வரும் நல்லுறவை வெளிக்காட்டுகிறது. அதிபர் எல்-சிசி, மூத்த அதிகாரிகள் உள்ளிட்டோரை சந்தித்துப் பேசுவதை எதிர்நோக்கியுள்ளேன். எகிப்தில் உள்ள இந்திய சமூகத்தினரையும் சந்திக்கவுள்ளேன்' எனக் குறிப்பிட்டுள்ளார்.

**நியூயார்க் சென்றடைந்தார்:** அமெரிக்கா சென்றடைந்த பிரதமர் மோடி ட்விட்டரில் வெளியிட்ட பதிவில், 'நியூயார்க் நகரம் வந்தடைந்தேன். இங்கு நடைபெற உள்ள நிகழ்ச்சிகளில் பங்கேற்க ஆவலாக உள்ளேன்' என்று தெரிவித்துள்ளார்.

அவரை விமான நிலையத்தில் அமெரிக்காவுக்கான இந்திய தூதர் தரண்ஜீத் சிங் சாந்து, ஐ.நா.வுக்கான இந்திய தூதர் ருசிரா கம்போஜ் மற்றும் இந்திய வம்சாவளியினர் வரவேற்றனர்.

## எலான் மஸ்க் உள்ளிட்டோரை சந்திக்கிறார் பிரதமர் மோடி

**நியூயார்க், ஜூன் 20:** அமெரிக்க பயணத்தின்போது தொழிலதிபர் எலான் மஸ்க், நோபல் விருதாளர் பால் ரோமர் உள்ளிட்டோரை பிரதமர் நரேந்திர மோடி சந்தித்துப் பேசவுள்ளார்.

அமெரிக்காவில் அரசுமுறைப் பயணம் மேற்கொண்டுள்ள பிரதமர் மோடி, பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளவுள்ளார். அதனிடையே, பல துறைகளைச் சேர்ந்த நிபுணர்களையும் அவர் சந்தித்துப் பேசவுள்ளார். முக்கியமாக, தொழிலதிபரும் ட்விட்டர் நிறுவனத்தின் உரிமையாளருமான எலான் மஸ்கை பிரதமர் மோடி சந்தித்துப் பேசவுள்ளார்.

விண்வெளி விஞ்ஞானியும் எழுத்தாளருமான நீல் டிகிராஸ் டைசன், நோபல் விருதாளரும் பொருளாதார நிபுணருமான பால் ரோமர், எழுத்தாளர் நிக் கோலஸ் நாசிம் தலேப், முதலீட்டாளர் ரே டேலியோ, ஃபாலு ஷா, ஜெஃப் ஸ்மித், மைக்கேல் ஃப்ரோமென், டேனியல் ரசல், எல்பிரிட்ஜ் கோல்பி, பீட்டர் ஆக்ரே, ஸ்டீபன் கிளாஸ்கோ, சந்திரிகா டாண்டன் உள்ளிட்டோரை பிரதமர் மோடி சந்திக்கவுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையேயான நல்லுறவை வலுப்படுத்துவது தொடர்பாக அவர்களுடன் பிரதமர் மோடி விவாதிக்கவுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. மேலும், இந்தியாவின் வளர்ச்சிப் பயணத்தில் பங்கெடுக்குமாறு அவர்களுக்கு பிரதமர் மோடி அழைப்பு விடுக்கவுள்ளதாகவும் தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# சட்டப்பேரவை நிகழ்வுகளை நேரலை செய்ய நடவடிக்கை

## உயர்நீதிமன்றத்தில் பேரவைச் செயலர் தகவல்

**சென்னை, ஜூன் 20:** தமிழக சட்டப் பேரவை நிகழ்வுகளை நேரடி ஒளிபரப்பு செய்ய படிப்படியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று பேரவைச் செயலர் சென்னை உயர்நீதிமன்றத்தில் பதில் மனு தாக்கல் செய்துள்ளார்.

தமிழக சட்டப்பேரவை நிகழ்வுகளை நேரடியாக ஒளிபரப்பு செய்யக்கோரி லோக் சத்தா கட்சியின் தமிழக தலைவர் ஜெகதீஸ்வரன், தேமுதிக தலைவர் விஜயகாந்த் ஆகியோர் முறையே 2012, 2015-ஆம் ஆண்டுகளில் சென்னை உயர்நீதிமன்றத்தில் பொதுநல வழக்குகளை தொடுத்திருந்தனர்.

இந்த வழக்குகள் தொடர்பாக, தமிழக சட்டப்பேரவைச் செயலர் சீனிவாசன் கூடுதல் பதில் மனு தாக்கல் செய்தார். அதில், 'பேரவைத் தலைவரின் ஒப்புதலுடன் ஆளுநர் உரை, நிதிநிலை அறிக்கை உரை உள்ளிட்ட சட்டப்பேரவையின் முக்கிய நிகழ்வுகள் தூர்தர்ஷன், அகில இந்திய வானொலி மூலம் நேரலை செய்யப்படுகின்றன.

மேலும், ஆளுநர் உரை, பட்ஜெட், மானிய கோரிக்கைகள் மீதான விவாதங்களுக்கு பதில் அளிப்பது, அரசு 110 விதியின் கீழ் வெளியிடும் அறிவிப்புகள் பேரவைத் தலைவரின் ஒப்புதலுடன் முழுமையாக நேரடி ஒளிபரப்பு செய்யப்படுகின்றன. இது தவிர யூடியூப், ட்விட்டர், ஃபேஸ்புக் போன்ற சமூக வலைதளங்கள் மூலமாகவும் வெளியிடப்படுகின்றன.

**பிற மாநிலங்களின் நிகழ்வுகள்:** பேரவைத் தலைவரின் உத்தரவுப்படி, சட்டப்பேரவை அதிகாரிகள், செய்தி மற்றும் மக்கள் தொடர்பு துறை அதிகாரிகள், 2021-ஆம் ஆண்டு நவம்பர் மாதம், நாடாளுமன்றத்தின் இரு அவைகள் மற்றும் பல்வேறு மாநிலங்களில் சட்டப் பேரவை நிகழ்வுகளை நேரடி ஒளிபரப்பு செய்ய பின்பற்றப்படும் நடைமுறைகளை ஆய்வு செய்தனர்.

அதன்படி, கோவா, ஆந்திரம், தெலங்கானா, கர்நாடகம் மற்றும் தில்லி சட்டப்பேரவை நிகழ்வுகள் முழுமையாக நேரடி ஒளிபரப்பு செய்யப்படுகின்றன. கேரளத்தில் கேள்வி நேரம் மட்டும் ஒளிபரப்பு செய்யப்படுகிறது. ஒடிஸாவில் சட்டப்பேரவை நிகழ்வுகள் தணிக்கை (எடிட்) செய்யப்பட்டு அன்றைய தினம் மாலை ஒளிபரப்பு செய்யப்படுகின்றன.

**கடந்த ஏப்ரல் முதல்...:** அனைத்து அம்சங்களையும் பரிசீலித்து சட்டப்பேரவை நிகழ்வுகளை படிப்படியாக நேரடி ஒளிபரப்பு செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது. கடந்த 2022 ஜனவரி 6-ஆம் தேதி முதல், கேள்வி நேரம் முழுவதும் நேரடி ஒளிபரப்பு செய்யப்பட்டு வருகிறது. 2023 ஏப். 12 முதல் கவன ஈர்ப்பு தீர்மானங்கள், முக்கிய தீர்மானங்களின் விவாதங்கள் நேரடி ஒளிபரப்பு செய்யப்பட்டு வருகின்றன.

இது தவிர, அன்றைய தினம் நடைபெறும் பேரவை நிகழ்வுகள் எடிட் செய்யப்பட்டு, சில மணி நேரங்களில் அனைத்து தொலைக்காட்சிகளுக்கும் வழங்கப்படுகின்றன. அதில் முக்கிய தலைவர்கள், எதிர்க்கட்சி உள்ளிட்ட உறுப்பினர்களின் உரைகளும் இடம்பெற்றுள்ளன. சட்டப்பேரவை நிகழ்வுகளை நேரடி ஒளிபரப்பு செய்வது குறித்து பேரவைத் தலைவர்தான் முடிவெடுக்க முடியும்' என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**எஸ்.பி.வேலுமணி மனுவில்...:** கடந்த 2011 முதல் 2021-ஆம் ஆண்டு வரையிலான அதிமுக ஆட்சிக்காலத்தில், சட்டப்பேரவையில் ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி உறுப்பினர்களின் பேச்சுகள் பதிவு செய்யப்பட்டு எடிட் செய்யப்பட்டு தொலைக்காட்சிக்கு அனுப்பி வைக்கப்பட்டதாகவும், தற்போதைய அரசு எதிர்க்கட்சி உறுப்பினர்களின் கேள்விகளை மறைத்து குறிப்பிட்ட பகுதிகளை மட்டும் வழங்கி வருவதாகவும் பேரவை உறுப்பினர் எஸ்.பி.வேலுமணி குற்றம் சாட்டியுள்ளார். நாடாளுமன்றத்தைப் போன்று சட்டப் பேரவையின் அனைத்து நிகழ்வுகளையும் நேரடி ஒளிபரப்பு செய்ய எந்த தடையும் இல்லை; நேரடி ஒளிபரப்பு செய்வதால் அரசுக்கு எந்தக் கூடுதல் செலவும் இல்லை என்று குறிப்பிட்டுள்ளார்.

**உடனடி ஒளிபரப்பு சாத்தியமில்லை:** இந்த வழக்கு தலைமை நீதிபதி எஸ்.வி. கங்காபூர்வாலா, நீதிபதி ஆதிகேசவலு ஆகியோர் அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்தது. அப்போது, தமிழக அரசு தரப்பில் ஆஜரான தலைமை வழக்குரைஞர் சண்முகசுந்தரம், 'அரசியல் சாசன அமைப்புச் சட்டத்தின்படி இந்த விவகாரத்தில், நீதிமன்றம் தலையிட முடியாது. மக்கள் எதை தெரிந்து கொள்ள வேண்டுமோ அது நேரடி ஒளிபரப்பு செய்யப்படும். நேரமில்லா நேரத்தை உடனடியாக நேரடி ஒளிபரப்பு செய்யமுடியாது. அது குறித்து பேரவைத் தலைவர் தான் முடிவெடுக்க வேண்டும்.

பேரவை நிகழ்ச்சிகளை நேரடி ஒளிபரப்பு செய்ய வேண்டுமென விஜயகாந்த் தாக்கல் செய்துள்ள வழக்கில் 8 ஆண்டுகள் கழித்து தம்மை இணைத்துக் கொள்ள அனுமதிக்க வேண்டுமென எஸ்.பி.வேலுமணி கோரியுள்ளார். எனவே, அவரது மனுவை ஏற்கக்கூடாது' என்றும் வாதிட்டார். இதையடுத்து வழக்கை விசாரித்த நீதிபதி, விசாரணையை ஜூலை 26-ஆம் தேதிக்கு ஒத்திவைத்து உத்தரவிட்டார்.

# தனியாக இரவு பயணிக்கும் பெண்களை அழைத்துச் செல்ல ரோந்து வாகனம்

## தமிழக காவல் துறை புதிய திட்டம்

**சென்னை, ஜூன் 20:** தமிழகத்தில் இரவு நேரத்தில் பயணிக்கும் பெண்கள் பாதுகாப்பாக செல்வதற்கு ரோந்து வாகனங்களை பயன்படுத்திக் கொள்ளலாம் என தமிழக காவல் துறை தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக சென்னையில் உள்ள டிஜிபி அலுவலகம் செய்வாய்க்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

தமிழக காவல் துறை பெண்களின் பாதுகாப்புக்காக புதிய திட்டத்தை அறிமுகம் செய்துள்ளது. அதன்படி, மாநிலத்தில் இரவு 10 முதல் காலை 6 மணி வரை பெண்கள் தனியாக பயணிக்கும்போது பாதுகாப்பு குறைவு என நினைத்தால் காவல் துறையை உதவி எண்கள் மூலம் அழைக்கலாம்.

**பெண்களுக்கு இலவச சேவை:** இந்த உதவி எண்களில் பேசும் காவலரிடம் பெண்கள் தங்களது நிலையை எடுத்துக் கூறி, அவர்கள் இருக்கும் இடத்தைத் தெரிவித்தால், அருகே உள்ள காவல் ரோந்து வாகனம் அனுப்பி வைக்கப்படும்.

இந்த வாகனம், பெண்கள் இருக்கும் இடத்துக்குகே வந்து பாதுகாப்பாக அழைத்துச் செல்லும். அனைத்து நாள்களிலும் இந்த சேவையைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

இந்த சேவையை 1091, 112 என்ற இலவச தொலைபேசி எண்கள் மூலமாகவும், 044-23452365, 044-28447701 ஆகிய தொலைபேசி எண்களைத் தொடர்பு கொண்டும் பெற்றுக் கொள்ளலாம். இந்த சேவை பெண்களுக்கு இலசமாக வழங்கப்படுகிறது என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தரமற்ற மருந்துகளுக்கு எதிராக மத்திய அரசு கடும் நடவடிக்கை

**புது தில்லி, ஜூன் 20:** இந்திய இருமல் மருந்துகளின் தரம் குறித்து அண்மையில் சர்ச்சை எழுந்த நிலையில், தரமற்ற மருந்துகளுக்கு எதிராக மத்திய அரசு கடுமையான கொள்கையைப் பின்பற்றுகிறது என்று மத்திய சுகாதார அமைச்சர் மன்சுக் மாண்டவியா தெரிவித்தார்.

மேலும், 'இருமல் மருந்து விவகாரத்தைத் தொடர்ந்து நடத்தப்பட்ட ஆய்வில், 71 மருந்து உற்பத்தி நிறுவனங்களிடம் விளக்கம் கேட்டு நோட்டீஸ் அளிக்கப்பட்டது; இதில் 18 நிறுவனங்களை மூடுவதற்கும் நோட்டீஸ் வழங்கப்பட்டது' என்று அவர் கூறினார்.

இந்தியாவில் தயாரிக்கப்பட்ட மாசடைந்த இருமல் மருந்துகளை அருந்தியதால் காம்பியாவில் 66 குழந்தைகளும், உஸ்பெகிஸ்தானில் 18 குழந்தைகளும் உயிரிழந்ததாக அண்மையில் சர்ச்சை எழுந்தது. இதையடுத்து, சம்பந்தப்பட்ட இருமல் மருந்துகளைப் பயன்படுத்த வேண்டாம் என்று உலக நாடுகளுக்கு ஐ.நா எச்சரிக்கை விடுத்தது.

இந்த விவகாரம், உலக அளவில் இந்திய தயாரிப்பு மருந்துகளுக்கு அவப்பெயரை ஏற்படுத்துவதாக அமைந்தது.

இந்நிலையில், மத்திய சுகாதார அமைச்சர் மன்சுக் மாண்டவியா, பிடிஐ செய்தி நிறுவனத்துக்கு அளித்த பிரத்யேக பேட்டியில் கூறியிருப்பதாவது:

இந்திய மருந்துகளைப் பற்றி கேள்வி எழும்போது, நாம் பல உண்மைகளை அறிந்துகொள்ள வேண்டியுள்ளது. உதாரணமாக, காம்பியாவில் குழந்தைகள் உயிரிழந்ததாகக் கூறப்பட்டதைத் தொடர்ந்து, ஐ.நா.விடம் பல்வேறு தகவல்களைக் கேட்டு இந்திய தரப்பில் கடிதம் எழுதப்பட்டது. ஆனால், எந்தத் தகவலும் நமக்கு கிடைக்கப் பெறவில்லை.



மன்சுக் மாண்டவியா

குழந்தைகளின் இறப்புக்கான காரணத்தைக் கண்டறிய முயற்சித்தோம். அப்போது, வயிற்றுப்போக்கால் பாதிக்கப்பட்ட குழந்தைக்கு இருமல் மருந்து பரிந்துரைக்கப்பட்டது கண்டறியப்பட்டது. அப்படி பரிந்துரைத்தது யார்?

**மருந்துகளின் தரம் உறுதி:** ஒட்டுமொத்த உலகுக்குமான மருந்தகமாக இந்தியா திகழ்கிறது. எனவே, உலகின் தரமான மருந்தகம் இந்தியா என்பதை ஒவ்வொருவருக்கும் உறுதி செய்ய விரும்புகிறோம். போலி மருந்துகள் மீது சகிப்பற்ற கொள்கையை மத்திய அரசு கடைப்பிடிக்கிறது.

போலியான மருந்துகளால் ஓர் உயிரிழப்புகூட நேராமல் தடுக்க அரசும், இதர ஒழுங்குமுறை அமைப்புகளும் எப்போதும் விழிப்புடன் செயலாற்றுகின்றன.

இருமல் மருந்துகள் குறித்து எழுந்த கவலைகளைத் தொடர்ந்து, 125-க்கும் மேற்பட்ட நிறுவனங்களில் விரிவான பகுப்பாய்வு நடத்தப்பட்டது. அப்போது, 71 நிறுவனங்களிடம் விளக்கம் கேட்டு நோட்டீஸ் அளிக்கப்பட்டது. இதில், 18 நிறுவனங்களை மூடுவதற்கும் நோட்டீஸ் வழங்கப்பட்டது. தொடர்ந்து ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றார் அவர்.

கடந்த 1-ஆம் தேதிமுதல் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் இருமல் மருந்துகள், குறிப்பிட்ட அரசு ஆய்வகங்களில் பரிசோதிக்கப்பட்டு, ஒப்புதல் பெறுவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

உலகளாவிய மூலக்கூறு மருந்துகளின் தேவையில் பெருமளவில் இந்தியா பூர்த்தி செய்கிறது. உலகின் மருந்து உற்பத்தியில் அளவு அடிப்படையில் மூன்றாவது இடத்திலும் மதிப்பு அடிப்படையில் 14-ஆவது இடத்திலும் இந்தியா உள்ளது. கடந்த 2022-23-இல் இந்தியா ஏற்றுமதி செய்த இருமல் மருந்துகளின் மதிப்பு 17.6 பில்லியன் டாலர்களாகும். முந்தைய ஆண்டில் இது 17 பில்லியன் டாலர்களாக இருந்தது.

### கரோனா: இதுவரை 224 புதிய வகைகள்

நாட்டில் இதுவரை 224-க்கும் மேற்பட்ட கரோனா புதிய வகைகள் கண்டறியப்பட்டுள்ளதாக அமைச்சர் மன்சுக் மாண்டவியா தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், 'ஓரிடத்தில் பொதுவாக நிலவக் கூடிய, அதிக பாதிப்பை ஏற்படுத்தாத நோய்த்தொற்று என்ற நிலைக்கு கரோனா கிட்டத்தட்ட வந்துள்ளது. எனினும், இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சில் ஆய்வாளர்கள் குழு தொடர் கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளது. புதிய கரோனா வகைகளைக் கண்டறிய மரபணு வரிசைப்படுத்துதல் சோதனைகள் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன. உலக அளவில் கரோனா நிலவரம் சீராக உள்ளது. எனினும், எதிர்காலத்தைக் கருத்தில்கொண்டு, இந்திய ஆய்வாளர்கள் விழிப்புடன் உள்ளனர்' என்றார்.

# சர்வதேச அரங்கில் முன்னிற்க தகுதியான நாடு இந்தியா

## அமெரிக்க நாளிதழுக்கான பேட்டியில் பிரதமர் மோடி

புது தில்லி, ஜூன் 20: சர்வதேச அரங்கில் முன்னிற்கவும் அதிக பங்களிப்பை வழங்கவும் தகுதியான நாடாக இந்தியா திகழ்வதாக 'தி வால் ஸ்ட்ரீட் ஜர்னல்' அமெரிக்க இதழுக்கு அளித்த பேட்டியில் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவில் அரசுமுறைப் பயணம் மேற்கொள்வதற்கு முன்பாகப் பிரதமர் மோடி அளித்த பேட்டியில் கூறியதாவது:

சர்வதேச அரங்கில் மற்ற நாடுகள் வகிக்கும் இடத்தை ஆக்கிரமித்துக் கொள்ள இந்தியா ஒருபோதும் முயன்றதில்லை. சர்வதேச அரங்கில் தனக்குரிய இடத்தைப் பெறவே இந்தியா தொடர்ந்து முயற்சித்து வருகிறது. சர்வதேச அளவில் முன்னிற்கவும், அதிக பங்களிப்பை வழங்கவும் தகுதியான நாடு இந்தியா.

இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையேயான நல்லுறவு முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு வலுவாக உள்ளது. இரு நாட்டுத் தலைவர்களுக்கு இடையேயான நம்பிக்கையும் இதுவரை காணாத வகையில் அதிகரித்துள்ளது.



இந்தியா சுதந்திரமடைந்த பிறகு பிறந்தவர்களில் பிரதமர் பொறுப்பை வகிக்கும் முதல் நபர் என்ற பெரும்பேறு எனக்குக் கிடைத்துள்ளது. அதன் காரணமாகவே எனது எண்ணவோட்டம், செயல்பாடுகள், பேச்சு உள்ளிட்டவை நாட்டின் பாரம்பரியத்தைச் சார்ந்து அமைந்துள்ளன. அவையே எனக்குத் தொடர்ந்து ஊக்கமளித்து வருகின்றன. எனது நாடு எவ்வாறு உள்ளதோ, அவ்வாறே சர்வதேச அரங்கில் வெளிக்காட்டி வருகிறேன்.

**எல்லையில் அமைதி அவசியம்:** இந்தியா-சீனா இடையேயான நல்லுறவு இயல்பாக இருப்பதற்கு, எல்லைப் பகுதிகளில் அமைதி நிலவ வேண்டியது அவசியம். மற்ற நாடுகளின் இறையாண்மை, பிராந்திய ஒருமைப்பாடு ஆகியவற்றை இந்தியா தொடர்ந்து மதித்து வருகிறது. சர்வதேச விதிகளை மதித்து, பிரச்னைகளுக்குப் பேச்சுவார்த்தை மூலமாகத் தீர்வு காண்பதிலேயே இந்தியா நம்பிக்கை கொண்டுள்ளது. அதே வேளையில், தனது இறையாண்மையையும் கௌரவத்தையும் காப்பதற்கான நடவடிக்கைகளையும் இந்தியா தொடர்ந்து மேற்கொள்ளும்.

**போர் தீர்வல்ல:** ரஷியா-உக்ரைன் போர் விவகாரத்தில் இந்தியா நடுநிலை வகிப்பதாக சிலர் கூறுகின்றனர். ஆனால், இந்தியா நடுநிலை வகிக்கவில்லை. இந்த விவகாரத்தில் இந்தியா அமைதியின் பக்கம் நிற்கிறது. சர்வதேச விதிகளையும் மற்ற நாடுகளின் இறையாண்மையையும் அனைத்து நாடுகளும் மதிக்க வேண்டும்.

பிரச்னைகளுக்குப் பேச்சுவார்த்தைகள் மூலமாக மட்டுமே தீர்வு காண வேண்டும். போர் எதற்கும் தீர்வாக அமையாது. இது தொடர்பாக ரஷிய அதிபர் விளாதிமீர் புதினுடனும், உக்ரைன் அதிபர் வொலோதிமீர் ஜெலென்ஸ்கியுடனும் பலமுறை பேசியுள்ளேன். போரை முடிவுக்குக் கொண்டு வந்து அமைதியை நிலைநாட்டுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள இந்தியா தயாராக உள்ளது. அத்தகைய நடவடிக்கைகளுக்கும் இந்தியா தொடர்ந்து ஆதரவளிக்கும்.

**சீர்திருத்தங்கள் அவசியம்:** சர்வதேச அரங்கில் இந்தியாவின் நிலையை அனைத்து நாடுகளும் புரிந்துகொண்டுள்ளன. அமைதிக்கு இந்தியா தலையாய முக்கியத்துவம் அளித்து வருவதை உலக நாடுகள் புரிந்துகொண்டுள்ளன. பனிப்போர் காலத்தில் உருவாக்கப்பட்ட பன்னாட்டு அமைப்புகள் பயங்கரவாதம், போர் உள்ளிட்ட சர்வதேச பிரச்னைகளுக்குத் தீர்வு காண்பதில் தோல்வி அடைந்துள்ளன. ஐ.நா. உள்ளிட்ட அமைப்புகளில் சீர்திருத்தங்களைப் புகுத்த வேண்டியது அவசியம்.

ஜனநாயகக் கொள்கைகளின் அடிப்படையில் அனைத்து நாடுகளின் குரல்களுக்கும் செவிசாய்க்கும் வகையில் பன்னாட்டு அமைப்புகள் சீர்திருத்தப்பட வேண்டும். ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலின் நிரந்தர உறுப்பினர்களை மாற்றியமைப்பது தொடர்பாகவும் அதில் இந்தியா இடம்பெறுவது குறித்தும் ஆய்வு செய்யப்பட வேண்டும் என்றார் பிரதமர் மோடி.

## இன்று சர்வதேச யோகா தினம்

# 'வசுதைவ குடும்பகத்துக்கு யோகா': உலகம் முழுவதும் சிறப்பு

புது தில்லி, ஜூன் 20: சர்வதேச யோகா தினம் புதன்கிழமை (ஜூன் 21) கொண்டாடப்படும் நிலையில், ஒரே குடும்பம், ஒரே பூமி என்ற செய்தி உலகம் முழுவதும் கொண்டு செல்லப்படுவதாக மத்திய துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழித்துறை அமைச்சர் சர்வானந்த சோனோவால் தெரிவித்தார்.

'வசுதைவ குடும்பகத்துக்கு யோகா' என்பது இந்த ஆண்டின் சர்வதேச யோகா தினத்தின் கருப்பொருளாகும்.

இது தொடர்பாக அமைச்சர் மேலும் கூறியதாவது:

முழுமையான, ஆரோக்கியமான, மகிழ்ச்சியான, அமைதியான மற்றும் ஆற்றல்மிக்க உலகை உருவாக்க சர்வதேச யோகா தினத்தில் பங்கேற்கும் அனைவரும் தொடர் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

யோகா நேர்மறை ஆற்றலைக் கொண்டுவருகிறது. மேலும் உலகை ஒரு மிகப்பெரிய குடும்பமாக நம்புகிறது.



சர்வதேச யோகா தினத்தை முன்னிட்டு ஆக்ராவில் யோகா பயிற்சி மேற்கொண்ட சிறார்கள்.

மேலும் ஆயுஷ் துறை கடந்த சில ஆண்டுகளில் வேகமாக முன்னேறியுள்ளது. பிரதமர் நரேந்திர மோடியின் அணுகுமுறை, தொலைநோக்குப் பார்வை மற்றும் இந்தியாவின் பாரம்பரியங்கள் பற்றிய ஆழமான புரிதல் ஆகியவை ஆயுஷ் துறையை வேகமாக வளரச் செய்கிறது.

பலவகையான சேவைகளை நோக்கிய அவரது உறுதிப்பாடும், அனைத்து துறைகளிலும் இந்தியா சிறந்து விளங்க வேண்டும் என்ற அவரது ஆர்வமும் உலகம் முழுவதும் சர்வதேச யோகா தினத்தைக் கொண்டாடுவதற்கு வழிவகுத்தது. தற்போது சர்வதேச யோகா தினத்தில் பங்கேற்பாளர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு ஆண்டும் பன்மடங்கு அதிகரித்து வருகிறது.

நமது பிரதமரின் முயற்சியால், ஜூன் 21-ஆம் தேதியை சர்வதேச யோகா தினம் என ஐ.நா. அறிவித்தது.

இதனை ஐநாவின் உறுப்பு நாடுகள் ஒருமனதாகவும், உளப்பூர்வமாகவும் ஏற்றுக்கொண்டன. இதையடுத்து சர்வதேச யோகா தினம் உலகம் முழுவதும் கோலாகலமாக கொண்டாடப்பட்டு வருகிறது.

உலகம் முழுவதும் யோகா என்பது ஒரே நாளில் உருவான யோசனை அல்ல. இது நன்கு சிந்திக்கப்பட்டு, விவாதிக்கப்பட்டு பிரதமர் நரேந்திர மோடியால் வடிவம் பெற்ற கருப்பொருளாகும். ஜி-20 மற்றும் ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் உறுப்பு நாடுகள் யோகாவை மிகவும் மதிக்கின்றன.

இந்த ஆண்டு, சர்வதேச யோகா தினத்தில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் இந்தியாவில் யோகா பயிற்சி மேற்கொள்ள உள்ளனர்.

சர்வதேச யோகா தினத்தைக் கொண்டாட மத்திய அரசின் ஒவ்வொரு அமைச்சகமும், இவற்றோடு சம்பந்தப்பட்ட அனைவரும் முழுமையான ஊக்கத்தோடு செயல்படுகின்றனர். மேலும் வெளிநாடுகளில் உள்ள இந்தியத் தூதரகங்கள் மற்றும் உலகெங்கிலும் உள்ள துணைத் தூதரகங்கள் ஆகியவற்றை வெளியுறவு அமைச்சகம் ஊக்கப்படுத்துகிறது.

இதன் மூலம் உலக சமூகத்தினரிடையே யோகா பிரபலமடைவதோடு, இந்தியாவின் கலாசார உறவையும் வலுப்படுத்துகிறது.

சர்வதேச யோகா தினம் 2023-இன் மையப்பொருளை முழுமையாக செயல்படுத்த உலகம் முழுவதும் மக்களை சென்றடையும் வகையில் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.



சர்வானந்த சோனோவால்

கடந்த ஆண்டு 'யோகாவின் பாதுகாப்பு வளையம்' என்ற நடைமுறையை மேற்கொண்டோம். இந்த ஆண்டு 'பெருங்கடல் வளையம்' என்பதை மையப்படுத்தி ஆர்க்டிக் முதல் அண்டார்டிகா வரை யோகா என்பதை செயல்படுத்துகிறோம். யோகா தின கொண்டாட்டத்தின் போது இந்திய ராணுவம், இந்திய விமானப்படை, கடற்படை, கடலோரக் காவல் படை மற்றும் எல்லை சாலைகள் அமைப்பு ஆகியவற்றின் பங்கேற்புடன் யோகா பாரத்மாலா உருவாக்கப்படும்.

பொதுவான யோகா நெறிமுறை கிராம அளவிலும் கடைப்பிடிக்கப்படும். இதற்காக பொதுவான சேவை மையங்களும் இதில் இணைக்கப்பட்டுள்ளன. தேசிய ஆயுஷ் இயக்கத்தின் கீழ் உள்ள ஆயுஷ் சுகாதாரம் மற்றும் நல்வாழ்வு மையங்களும் பொதுவான யோகா நெறிமுறையைக் கடைப்பிடிக்கும்.

இந்தியாவில் உள்ள 2 லட்சத்திற்கும் மேற்பட்ட கிராமங்களில் உள்ள மக்களுக்கு பொதுவான யோகா நெறிமுறையில் பயிற்சி அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அடையாளம் காணப்பட்ட கிராமத்திற்கு யோகா பயிற்சியாளர்கள் நியமிக்கப்பட்டிருப்பதால் சம்பூர்ண யோகா கிராமம்'என்ற நிலை உருவாகும்.

இந்த ஆண்டு, நமது பிரதமர் நியூயார்க்கில் உள்ள ஐக்கிய நாடுகள் தலைமையகத்தில் நடைபெறும் யோகா நிகழ்ச்சிக்கு தலைமை தாங்குகிறார். இது சர்வதேச அளவில் யோகாவுக்கான ஆதரவை மேலும் அதிகரிக்கச் செய்யும் என்று நான் நம்புகிறேன்.

'வசுதைவ குடும்பகம்' என்ற மையப்பொருளுடன் இந்த ஆண்டு சர்வதேச யோகா தினம் சிறப்பு வாய்ந்ததாக இருக்கும். இதனை வெற்றி பெறச் செய்வதற்கு நம் ஒவ்வொருவரின் பங்களிப்பும் அவசியமாகும் என்று கூறியுள்ளார்.